இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 24-03-2025

# கூட்டாட்சியைக் காக்கும் தலைவர்

இந்தியாவையே தமிழ்நாட்டை நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் திராவிட நாயகன் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஏழு மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து, ‘கூட்டாட்சியைக் காக்கும் தலைவர்’ என்று அவருக்கு மகுடம் சூட்டி இருக்கிறார்கள். தொகுதி மறுசீரமைப்புக்கான கூட்டத்தை இந்திய கூட்டாட்சியைச் சீரமைக்கும் கூட்டமாக மாற்றிக் காட்டியதன் மூலமாக இந்தியத் தலைவராக உயர்ந்து நிற்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் ஐந்து செய்திகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக அறிவித்துள்ளார்.

**1. “மக்கள்தொகை கணக்கெடுப்பு” (Census) அடிப்படையில் மேற்கொள்ளவிருக்கும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறு சீரமைப்பு என்பது நம்மைப் போன்ற மாநிலங்களை வெகுவாகப் பாதிக்கப் போகிறது. மக்கள் தொகையை பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மூலமாகக் கட்டுப் படுத்திய நம்மைப் போன்ற மாநிலங்கள்- அதன் காரணமாக நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகம் இழக்க நேரிடும்.**

**2. இது வெறும் எண்ணிக்கையைப் பற்றியது மட்டுமல்ல - இது நமது அதிகாரம், நமது உரிமைகள் மற்றும் நமது எதிர்காலத்தின் நலன்களைப் பற்றியது.**

The loss of parliamentary seats is not just about reduced numbers in the Lok Sabha- it is about the erosion of our power, our rights, and our future.

**3. தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அனுமதித்தால், நம் சொந்த நாட்டில் நாமே அரசியல் அதிகாரம் இழந்த குடிமக்களாக மாறும் அபாயம் உள்ளது.**

**4. ஜனநாயக பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அந்த நடவடிக்கையானது நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதிக்கக்கூடாது.**

**5. இந்தப் போராட்டம் எல்லை வரையறைக்கு எதிரானது அல்ல. இந்தப் போராட்டம் நியாயமான எல்லை வரையறையை வலியுறுத்துகிறது.**

This fight is not against delimitation.

This fight is for fair delimitation.

- ஆகிய ஐந்தும் தான் இந்திய நாட்டுக்கு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பி இருக்கும் செய்தி ஆகும். இது ஏதோ இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள மாநிலங்களுக்கான செய்தி மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களுக்குமான செய்தி தான்.

**இந்தியக் கூட்டாட்சியில் நம்பிக்கையில்லாத கட்சி பா.ஜ.க. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நம்பிக்கையில்லாத கட்சி பா.ஜ.க. மாநிலங்களை மொத்தமாக ஒழிக்க நினைக்கும் கட்சி பா.ஜ.க. மாநிலங்களே இருக்கக் கூடாது என்று நினைக்கும் கட்சி பா.ஜ.க. பல்வேறு இனம்,மொழி, பண்பாட்டு விழுமியங்கள் கொண்ட மக்களின் அடையாளங்களை அழிக்க நினைக்கும் கட்சி பா.ஜ.க. இந்த நோக்கத்தை பல்வேறு வகைகளில் அது செயல்படுத்தி வருகிறது.**

இந்தியின் மூலமாக இந்தியாவின் பல்வேறு மொழிகளை அழித்தார்கள். அழிக்க நினைக்கிறார்கள். ஒரே நாடு என்பதன் மூலமாக இந்திய மக்களின் பண்பாட்டைச் சிதைக்க நினைக்கிறார்கள். மாற்று மதம் கொண்டவர்களை மனிதர்களாகவே அவர்கள் நினைப்பது இல்லை என்பதற்கு உதாரணம் தேவையில்லை. இந்த வரிசையில் மாநிலங்களின் நிதி உரிமையைப் பறித்து - ஒன்றிய அரசைப் பார்த்து பிச்சைப்பாத்திரம் ஏந்தி நிற்கும் நிலைக்கு மாநில அரசுகளைத் தள்ளி விட்டார்கள்.

இவை அனைத்தையும் உணர்ந்து - எச்சரிக்கை உணர்வோடு குரல் கொடுக்கும் தலைவராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் இருக்கிறார். பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக எதிர்ப்பது என்பது வேறு. பா.ஜ.க. என்ற அரசியல் கட்சியின் மூலத் தத்துவத்தை எதிர்த்துக் களமாடுவது என்பது வேறு. ‘நமக்கும் அவர்களுக்குமான யுத்தம் என்பது இரண்டு தத்துவங்களுக்கு இடையிலான யுத்தம்’ என்று முதலில் சொன்னவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.

இந்தக் குரலை தமிழ்நாட்டுக்குள் மட்டும் ஒலிக்காமல் அனைத்து இந்தியா முழுமைக்கும் ஒலிக்க வைத்தது தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது வெற்றியாகும். சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பை உருவாக்கினார். மாநில சுயாட்சிக் குரலை இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் கொண்டு சென்றார். குடியுரிமை சட்டத்துக்கு எதிராகவும், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதற்கு எதிராகவும் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்தார். இதனைச் செயல்படுத்துவதற்கு ‘இந்தியா’ கூட்டணியை உருவாக்கி அனைத்துக் கட்சிகளையும் ஒருகுடையின் கீழ் கொண்டு வந்தார்.

**‘இந்தியா’ கூட்டணியை உருவாக்குவதற்கு முன்பு வரை தனித்தனித் தீவாக இருந்த அரசியல் கட்சிகளை ஒன்றாக்கிக் காட்டுவதற்கு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் போட்டுக் கொடுத்த, பாதை மிகமிக முக்கியமானதாக அமைந்திருந்தது. கூட்டணி, தொகுதிப் பங்கீடு, தொகுதிகளை விட்டுத் தருதல் என்ற பல்வேறு வழிமுறைகளை ‘இந்தியா’ கூட்டணிக் கூட்டத்தில் வகுத்துக் கொடுத்தார். பெரும்பான்மையை இழந்து கூட்டணிக் கட்சிகளின் தயவோடு தான் ஆட்சியில் இருக்கிறது பா.ஜ.க. இன்றைக்கு அவர்களால் நிம்மதியாக நாடாளுமன்றத்தைக் கூட நடத்த முடியாத அளவுக்குத் தான் நிலைமை உள்ளது.**

இந்த நிலையில் தான் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையைக் கையில் எடுத்து, இதனால் பாதிக்கப்படும் மாநிலங்களை ஒருங்கிணைத்து விட்டார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின். இதனையும் பா.ஜ.க. எதிர்பார்க்கவில்லை. ‘தமிழ்நாடு முதலமைச்சர் அவரது மாநிலத்துக்குள் எந்த நடவடிக்கை எடுத்தாலும் நாம் அதைப் பற்றி கவலைப்படப் போவது இல்லை. ஆனால் அவரது செயல்பாடுகளைப் பார்த்து மற்ற மாநிலக் கட்சிகளும் செயல்படுகின்றன. அதுதான் பெரிய பிரச்சினையாக மாறுகிறது’ என்று பா.ஜ.க.வின் தலைவர்களில் ஒருவர் தனிப்பட்ட கலந்துரையாடலில் சொல்லி இருக்கிறார். இதுதான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது மாபெரும் வெற்றியாகும்.

இந்தியக் கூட்டாட்சியானது செல்ல வேண்டிய பாதையைத் தீர்மானிக்கும் கலங்கரை விளக்காக உயர்ந்து விட்டார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின்.

●●

## தொகுதி மறுசீரமைப்பு கூட்ட நிகழ்வுகளைக் கண்டேன் – ஒவ்வொரு பேச்சும் மணியா இருந்தது!

# உண்மையான கூட்டாட்சி தத்துவத்தின் கருப்பொருளுக்கு இலக்கணம் வகுத்துள்ளீர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் நெகிழ்ச்சியான கடிதம்!

**சென்னை, மார்ச் 24-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் அவர்கள் எழுதிய கடிதத்தில் தொகுதி மறுசீரமைப்பு கூட்ட நிகழ்வுகளைக் கண்டேன், ஒவ்வொரு பேச்சும் மணியாக இருந்தது, உண்மையான கூட்டாட்சி தத்துவத்தின் கருப்பொருளுக்கு இலக்கணம் வகுத்துள்ளீர்கள் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வருக்கு, அ.அன்புச் செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

அன்புள்ள நண்பர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு,

சீரிய அன்பு வணக்கம்,

தொகுதி மறுசீரமைப்பு கூட்ட நிகழ்வுகளை கண்டேன், ஒவ்வொரு பேச்சும் மணியாக இருந்தது. உண்மையான கூட்டாட்சி தத்துவத்தின் கருப்பொருளுக்கு இலக்கணம் வகுத்துள்ளீர்கள்.

நேற்றைய தினம் தேசிய காட்சி ஊடகங்களின் தலைப்புச் செய்தியும், இன்றைய ஊடகங்களின் முதற்பக்கமும் தாங்கள் தான்.

வெல்க உங்களது கொள்கை முழக்கங்கள்.



தந்தையின் வழியில் தங்களின் பயணம், இந்திய அரசியலில் ஒரு ஸ்திரத்தன்மை ஏற்பட்டு அரசியல் வானில் கருமேகங்கள் சூழ்ந்த பொழுது, விடிவெள்ளியாகத் தோன்றி “தேசிய முன்னணியை” உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதன்மூலம் காங்கிரஸ் அல்லாத ஒரு அரசு திரு வி.பி. சிங் தலைமையில் உருவாக்கியவர் கலைஞர் அவர்கள்.

அத்தகைய ஆட்சியின் மூலம் காவிரி நதிநீர் ஆணையம் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை அமல் படுத்தியது போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு வழி கோலியவர் கலைஞர் அவர்கள்.

அவரையே மிஞ்சும் அளவிற்கு சட்ட மன்றத்தில் “நிதிக்காக கொள்கையை இழக்க மாட்டோம்” என்று ஓங்கி ஒலித்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசுவின் குரலில் உங்களின் கொள்கைப் பற்றை கண்டேன். உளம் பூரித்தேன்.

தொகுதி மறுவரை பிரச்சினையில் அனைத்து மாநிலக் கட்சிகளின் தலைவர்களை ஒருங்கிணைத்து ஒன்றிய அரசுக்கு எதிராக அணிவகுக்க வைத்துள்ள உங்கள் தீரம் கண்டு பா.ஜ.க. அச்சம் கொண்டுள்ளது என்பதற்கு சான்று பாராளுமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு. மிதமுஞ்சிய எரிச்சலில் பா.ஜ.க. உள்ளது என்பதே உங்களது முயற்சிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

**வாழ்க உங்களின் கொள்கைப் பற்று.!**

**வெல்க உங்கள் கொற்றம்!**

**தமிழ்நாடு போராடும்!**

**தமிழ்நாடு வெல்லும்!**

**வாழ்த்துகள்,**

**- அ. அன்புச்செல்வன்**
**23.03.2025**

## நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன! தாங்கள் தந்தனுப்பிய

# “தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும்” நூல் - தமிழர்களின் பெருமிதம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கவிப்பேரரசு வைரமுத்து பெருமித கடிதம்!

**சென்னை, மார்ச்.24**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதத்தில் “தாங்கள் தந்தனுப்பிய தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும் நூல் தமிழர்களின் பெருமிதம் எனவும், நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் தந்தனுப்பிய **‘தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும்’** என்ற பெருநூல் என்னை மகிழ்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் ஆளாக்கியது.

நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன.

சங்ககாலம் முதல் நிகழ்காலம் வரை தமிழர்களின் நிதிநிர்வாக மாண்புகளை ஒரு வரலாற்றுப் பெட்டகமாக வழங்கியிருக்கிறீர்கள்.

நூலின் உள்ளடக்கமும் உறுதியான கட்டமைப்பும் என்னை இரண்டு கைகளாலும் ஏந்திப் படிக்க வைத்தன. ஒரு பல்கலைக் கழகம் சில ஆண்டுகள் முயன்று செய்ய



வேண்டிய முனைவர் பட்ட ஆராய்ச்சியினைத் தமிழ்நாட்டு அரசின் நிதித்துறை குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழ்த்தி முடித்திருப்பது நெடும்பணியாகும்.

எங்களைப் போன்ற அறிவாசை மிக்கவர்களுக்கு இந்நூலின் தரவுகள் தீராத வரவுகள்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் குறித்தும், கல்லணை குறித்தும், வெள்ளையர் ஆட்சி குறித்தும், சேது மன்னர்களின் கடல் வணிகம் குறித்தும் ஆதாரங்களோடும் அரிய படங்களோடும் தொகுத்திருப்பது தொண்டுகளில் பெரியது.

‘காலந்தோறும் நாணயங்கள்’ என்ற பதிவில் பத்தாம் நூற்றாண்டின் ராஜராஜ சோழனின் நாணயங்களைக் கண்டு கண்களில் ஒற்றிக்கொண்டேன்.

அறிஞர் அண்ணாவின் படிஅரிசித் திட்டமும், கலைஞரின் குடிசைமாற்று வாரியத் திட்டமும் பதிவாகி இருப்பது போலவே, ஏனைய முதலமைச்சர்களின் திட்டங்களையும் இடம்பெறச் செய்திருப்பது நாணயம் தவறாத நடுநிலைமையைக் காட்டுகிறது.

முன்னுரையில் தாங்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, “நாம் கடந்துவந்த பாதை கடினமானதாக இருந்ததே ஒழிய, கடக்க முடியாததாக இருக்கவில்லை” என்பதற்கு இந்த உன்னத நூலே உயிர்ச் சான்று.

மற்ற நூல்களைப் படிப்பேன்; இதைக் கற்கப் போகிறேன்.

இதை வெளியிட ஆணையிட்ட தங்களுக்கும், நிதித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், நிதித்துறைச் செயலாளர் அவர்களுக்கும் என் வணக்கமும் வாழ்த்தும்.

இந்நூல் தமிழர்களின் பெருமிதம்.

நன்றி.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டில் மழைபெய்ய வாய்ப்பு!

சென்னை, மார்ச் 24–

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. அதே போல், பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று (2303 2025): தமிழ்நாட்டில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று (24032025): தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25.03.2025 மற்றும் 26.03.2025: மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



ஆத்தூர் ஒன்றியம் பிள்ளையார் நத்தம் ஊராட்சிக்குட்பட்ட மாதா நகரில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய குடிதண்ணீர் திட்டத்தை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமி திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்கினார். அருகில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் உலகநாதன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.